# அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி


பழனி–624 601. திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு

**(தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் 3வது சுற்று மதிப்பீட்டில்‘B++’அங்கீகாரம் பெற்றது)**

(தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தால் நடத்தப்படும் கல்வி நிறுவனம்)

( மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை– இணைவு பெற்ற அரசு உதவிபெறும் கல்வி நிறுவனம்)

**Web : www.apcac.edu.in**

**E-mail : apacac_men@yahoo.co.in** ☎04545 – 251288





## தகவல் தொகுப்பு 2026-2027

### சுயநிதி பாடப் பிரிவு

### (ஆண்/பெண் இரு பாலரும் சேர்த்துக் கொள்ளப்படுவர் )

**இளங்கலை (பி.ஏ.)**

**இளம் அறிவியல் (பி.எஸ்ஸி.)**

**இளம் வணிகவியல் [பி.காம்., பி.காம் (Blockchain &Fintech)., & பி.காம் (சி.ஏ)]**

**இளம் வணிக நிர்வாகவியல் (பி.பி.ஏ.)**

**(மாணவர்கள் தங்கிப் பயில்வதற்கு விடுதி வசதி உள்ளது.)**

அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட, தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாவது சுற்று மதிப்பீட்டில்'$B^{++}$' தரம் பெற்ற கல்லூரி.

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் கல்லூரி ஆட்சிக் குழுவின் தலைவராகவும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் இணை ஆணையர் அவர்கள் இக்கல்லூரியின் தாளாளராகவும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் துணை ஆணையர் இக்கல்லூரியின் செயலராகவும் செயல்படுகின்றனர்.

பழனி முருகன் அருளால் இக்கல்லூரியில் கற்பிக்கும் கல்வி மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் அனைத்திலும் வெற்றி பெற்று மாணவர்கள் சிறப்படைகின்றனர்.

அதிகரித்து வரும் உயர்கல்வித் தேவையை கருத்தில் கொண்டு கிராமப்புற மாணவ/மாணவியர் குறைந்த செலவில் படித்து பட்டம் பெறுவதற்கான வாய்ப்பை பெற வேண்டுமென்ற சீரிய நோக்கோடு கல்லூரி நிர்வாகம் 1999 – 2000ஆம் கல்வி ஆண்டு முதல் BCA., B.Sc.,(IT) கணினி வகுப்புகளும், 2002 – 2003 ஆம் கல்வி ஆண்டு முதல் மாலை நேர வகுப்புகளும் சுயநிதி அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது.

அரசு உதவிபெறும் பாடப்பிரிவில் பயிலும் மாணவர்களுக்கும், சுயநிதிப் பாடப் பிரிவில் பயிலும் மாணவ/மாணவியருக்கும் பாடத் திட்டம் தேர்வுகள் மற்றும் வழங்கப் பெறும் பட்டம் ஆகிய வற்றில் எவ்வித வேறுபாடுமில்லை.

மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பதாரர்கள் கல்லூரி இணையதளம் மூலம் மட்டுமே பூர்த்தி செய்யவேண்டும்.

## *சுயநிதி பாடப் பிரிவுகள்*

***இளநிலை பாட வகுப்புகள் (UG)*** **(ஆண்/பெண் இருபாலரும் சேர்த்துக் கொள்ளப்படுவர் )**

1. பி.ஏ., தமிழ் இலக்கியம் (B.A., Tamil)
2. பி.சி.ஏ ., (B.C.A.,)
3. பி.எஸ்.சி., (சி.எஸ்) [B.Sc.,(C.S)]
4. பி.காம் ., (B.Com., ) (ஆங்கிலவழி)
5. பி.காம் ., (B.Com., ) (தமிழ்வழி)
6. பி.காம் ., [B.Com., (Blockchain &Fintech)., ]**
7. பி.காம் (சி.ஏ)., [B.Com(C.A).,]
8. பி.பி.ஏ ., (B.B.A.,)

***சான்றிதழ் /பட்டய வகுப்புகள்***

1. இந்தியத் தத்துவம் மற்றும் சைவ சித்தாந்தம்
2. காந்திய சிந்தனை
3. கல்வெட்டியல்**

** பல்கலைக்கழக அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

**மாணவர்கள் தங்கிப் பயில்வதற்கு விடுதி வசதி உள்ளது.**

**விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அனைத்து நாட்களிலும் மூன்று வேளையும் கட்டணமில்லா உணவு வழங்கப்படும்.**

**அனைத்து மாணவ/ மாணவியர்களுக்கும் கட்டணமில்லா காலைச்சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது**

***<u>விண்ணப்பதாரர்கள் செயல்பட வேண்டிய முறைகள்:</u>***

1. சேர்க்கைக்கான விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்களே பதிவேற்றம் செய்ய வேண்டும்.
2. ஒரு விண்ணப்பத்தின் மூலம் அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.
3. கடவுச் சீட்டு அளவிலான புகைப்படம், +2 மதிப்பெண் பட்டியல், சாதிச் சான்றிதழ் ஆகியவற்றை விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
4. மேல் நிலைப்பள்ளிச் சான்றிதழ்களில் குறிப்பிட்டுள்ளவாறு பிறந்த தேதியை குறிப்பிட வேண்டும்.
5. பட்டியல் இனத்தவர்கள் (SC), பட்டியல் இனத்தவர்கள் (அருந்ததியினர்) (SCA)/ பழங்குடியினர் (ST), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC) / சீர்மரபினர் (DNC) / பிற்பட்ட வகுப்பினர் (BC) மற்றும் பிற்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BC-M) சேர்ந்த விண்ணப்பதாரர்களின் சாதிச் சான்றிதழ்கள் உரிய அரசு அதிகாரிகளால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
6. சரியான மதிப்பெண்களையே விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களில் குறிக்க வேண்டும். பரிசீலனைக்குப்பின் சரியான மதிப்பெண்கள் குறிக்கப்படவில்லை என்று தெரியவந்தால்

    அ) விண்ணப்பதாரர் இக்கல்லூரியில் சேரும் தகுதியை இழப்பார்.

    ஆ) அடுத்த மூன்றாண்டுகளுக்கு அவர் படிக்க முடியாதபடி தடை செய்யப்படுவார்.

    இ) தவறான மதிப்பெண்களை குறிப்பிட்டதற்காக அவர் மீது சட்டப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. மாற்றுத்திறனாளிகள், தமிழ் நாட்டைச் சார்ந்த முன்னாள் இராணுவப் படைவீரர்களின் குழந்தைகள், அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தமிழினத்தை சார்ந்தவர், விளையாட்டு (மாவட்ட/ மண்டல அளவிலும் அல்லது அதற்கு மேலும்) சான்றிதழ்கள் மற்றும் தேசிய மாணவர்படை சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் உரிய விபரத்தை அதற்குரிய இடத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
8. சரியான விபரங்கள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
9. கல்லூரிக் கல்வி இயக்குநரக வழி காட்டுதலின் படி மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.
10. பட்டியலின SC/ST விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணமின்றி பதிவுக் கட்டணம் ரூ. 2 /– மட்டும் (ரூபாய் இரண்டு) மட்டும் செலுத்தினால் போதும்.
11. விண்ணப்பதாரரின் வயது வரம்பு சலுகை அரசு விதிகளின் படி வழங்கப்படும்.
12. கல்லூரிச் சேர்க்கையில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அதைக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம்.
13. மாணவ/மாணவியர்களை கேலி (ராக்கிங்) செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறும் மாணவர்கள் அரசு ஆணைப்படி தண்டிக்கப்படுவார்கள்.

14. மாணவர்கள் சேர்க்கையின் பொழுது சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள்

i. பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் ஒளிப்படி நகல் (Xerox Copy) ஒன்று.

ii. கடவுச் சீட்டு அளவிலான மூன்று புகைப்படங்கள்.

iii. +2 அசல் மதிப்பெண் சான்றிதழ் (சரிபார்க்க மட்டும்) மற்றும் ஒளிப்படி நகல்கள் (Xerox Copy) மூன்று.

iv. பட்டியல் இனத்தவர் (SC), பட்டியல் இனத்தவர் அருந்ததியர் (SCA), பழங்குடியினர் (ST), மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (MBC)/ சீர்மரபினர் (DNC), பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (BC), பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BC-M) ஆகியோர் அசல் சாதிச் சான்றிதழ் (சரிபார்க்க மட்டும்). மேற்கண்ட சான்றிதழ்களின் மூன்று ஒளிப்படி நகல்கள் (Xerox Copy) சமர்ப்பிக்க வேண்டும்.

v. கடைசியாக படித்த கல்வி நிறுவனம் வழங்கிய அசல் மாற்றுச் சான்றிதழ் மற்றும் நடத்தைச் சான்றிதழை கட்டாயம் ஒப்படைக்க வேண்டும். அசல் மாற்றுச் சான்றிதழ் திருப்பித் தரப்படமாட்டாது. எனவே, தேவையான ஒளிப்படி (Xerox Copy) நகல்களை முன்கூட்டியே எடுத்துவைத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

vi. மாற்றுத்திறனாளியாக இருந்தால் உரிய அசல் சான்று (சரிபார்க்க மட்டும்) மற்றும் ஒளிப்படி நகல்கள் (Xerox Copy) மூன்று.

vii. முன்னாள் படைவீரரின் மகன்/மகளாக இருந்தால் உரிய அசல் சான்றிதழ் (சரிபார்க்க மட்டும்) மற்றும் ஒளிப்படி நகல்கள் (Xerox Copy) மூன்று.

viii. புலம் பெயர்ந்த தமிழர்களாக இருந்தால் உரிய அசல் சான்று (சரிபார்க்க மட்டும்) மற்றும் ஒளிப்படி (Xerox Copy) நகல்கள் மூன்று.

ix. விளையாட்டு/NSS/NCC போன்றவற்றின் அசல்சான்றுகள் (சரிபார்க்க மட்டும்) மற்றும் அதன் ஒளிப்படிநகல்கள்(Xerox Copy) மூன்று.

15. சேர்க்கை முடிந்த பின் அன்றே கல்விக் கட்டணத்தையும் பிற கட்டணங்களையும் கல்லூரி அலுவலகத்தில் செலுத்த வேண்டும். அவ்வாறு சரியான நேரத்தில் கட்டணம் செலுத்த தவறும் விண்ணப்பதாரர்களின் சேர்க்கை ரத்து செய்யப்படும்.

**16. சேர்க்கை பெற்றமாணவர்கள் எந்த காரணங்களுக்காகவும் கல்லூரியை விட்டு விலகினால் கட்டணங்கள் திருப்பித்தரப்பட மாட்டாது.**

17. மாணவர்கள் சேர்க்கை பற்றிய விபரங்களை www.apcac.edu.in என்ற கல்லூரி இணையதளம் வாயிலாகத் தெரிந்துகொள்ளலாம்.

18. இளநிலை மாணவர் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை கல்லூரி இணையதளம் மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பபடிவக் கட்டணமாக ரூ. 50 /– (ரூபாய் ஐம்பது மட்டும்) இணையதளம் (Online) மூலம் செலுத்த வேண்டும். SC/ST விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணமின்றி பதிவுக்கட்டணம் ரூ.2/– (ரூபாய் இரண்டு மட்டும் ) இணையதளம் (Online) செலுத்தினால்போதும்.

**மாணவர் சேர்க்கையின் பொழுது செலுத்த வேண்டிய கட்டண விபரம் (ஓர் ஆண்டுக்கு):**

(பட்டியலின (SC/ST) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை)

| | B.A., (Tamil)<br>B.Com.,(English Medium)<br>B.Com.,(Tamil Medium),<br>B.B.A., | B.Com.,<br>(Blockchain & Fintech), | B.C.A.,<br>B.Sc.,(CS) | B.Com.,<br>(CA) |
|---|---|---|---|---|
| | (Rs.) | | (Rs.) | (Rs.) |
| சேர்க்கைக் கட்டணம் | 10 | 10 | 100 | 10 |
| கல்விக்கட்டணம் | 9150 | 14275 | 9510 | 11650 |
| சிறப்புக்கட்டணம் | 540 | 540 | 590 | 540 |
| ஆய்வகக்கட்டணம் | ---- | 2500 | 3000 | 2500 |
| Caution Deposit | --- | | 500 | ---- |
| பல்கலைக்கழக நுழைவுக் கட்டணம் | 600 | 600 | 600 | 600 |
| பட்டமளிப்பு விழா மற்றும் இதர கட்டணம் | 25 | 25 | 25 | 25 |
| மதிப்பெண் பட்டியல் சரிபார்ப்பு கட்டணம் | 50 | 50 | 50 | 50 |
| **மொத்தம்** | **10375** | **18000** | **14375** | **15375** |

( மேற்கண்ட கட்டணங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.)

**** மாணவர் அடையாளஅட்டை கட்டணம் தனி**

# ARULMIGU PALANIANDAVAR COLLEGE OF ARTS AND CULTURE

**Palani – 624601, Dindigul District, Tamil Nadu**

***(Accredited by NAAC with 'B$^{++}$' Grade in the 3rd Cycle)***

**(Run by Palani, Arulmigu Dhandayuthapani Swami Thirukoil, HR & CE (Admin.) Dept., Government of Tamil Nadu)**

**(A Government Aided College - Affiliated to Madurai Kamaraj University, Madurai)**

**Website :**www.apcac.edu.in

**Email:**apacac_men@yahoo.co.in ☎**04545 – 251288**



# Prospectus 2026 – 2027

## Self Finance Courses (Co-Education)

**Bachelor of Arts (B.A.)**

**Bachelor of Science (B.Sc.)**

**Bachelor of Commerce [B.Com, B.Com (Blockchain & Fintech)& B.Com (CA)]**

**Bachelor of Business Administration (B.B.A.)**

**(HOSTEL FACILITY IS AVAILABLE FOR MEN ONLY)**

Arulmigu Palaniandavar College of Arts and Culture, Palani is run under the aegis of the Hindu Religious and Charitable Act of Government of Tamil Nadu. The college is administered by the Commissioner of Hindu Religious and Charitable Endowment as the President of the College Managing Committee, Joint Commissioner of Palani Dhandayuthapani Swami Thirukoil as the Correspondent, and Deputy Commissioner of Palani Dhandayuthapani Swami Thirukoil as the Secretary of the college. By the grace of Lord Muruga, the graduates of this institution shine in their academic pursuits as well as in career opportunities.

***(SELF FINANCE UNDER GRADUATE DEGREE COURSES)***

*Apply only through College Website (www.apcac.edu.in)*

1. B.A., Tamil Literature
2. B.C.A.,
3. B.Sc., Computer Science
4. B.Com., (English Medium)
5. B.Com., (Tamil Medium)
6. B.Com., (Blockchain & Fintech)**
7. B.Com (CA).,
8. B.B.A.,

**Certificate/ Diploma Courses**

1. Indian Philosophy and SaivaSithantham
2. Gandhian Thought
3. Epigraphy **

** Subject to University Accreditation Affiliation

**HOSTEL FACILITY IS AVAILABLE FOR BOYS ONLY**

**THE MANAGEMENT BESTOWS BREAKFAST, LUNCH AND DINNER FOR HOSTEL STUDENTS DAILY**

**THE MANAGEMENT BESTOWS BREAK FAST AND LUNCH FOR ALL STUDENTS**

**Instruction to Candidates:**

1. The candidates are requested to apply only through online mode
2. The candidates applying for more than one subject need not submit a separate application. Submission of one application for various programmes is advisable.
3. Scanned copies of the following must be uploaded along with the application.
    - A passport sized photograph
    - +2 Mark Statement
    - Community Certificate
    - Certificates/Documents by
        - Differently abled candidates
        - Children of Tamil Nadu Ex-servicemen
        - NCC certificate holders
        - Participants in Sports / NCC / NSS
4. The Date of Birth in the application should be as in the SSLC mark statement.
5. Applicants belonging to SC, SC (A), ST, MBC/DNC, BC and BC (M) should possess a valid community certificate issued by the authorities concerned.
6. The marks obtained by the candidate in the HSC examinations should be provided in the application without any error. In any case, if the marks provided by a candidate is found to be incorrect,
    a) The application will be summarily rejected
    b) Legal action would be taken against the applicant for providing wrong information
    c) The candidate will be barred from seeking admission in the college for next three years
7. Differently abled candidates, the children of Tamil Nadu Ex-service men, Tamilians from Andaman and Nicobar Islands, Sports Students (District / Zone/ State/ National/ International level players) and NCC certificate holders are requested to provide their details in the application, wherever required.
8. Incomplete and incorrect applications will be summarily rejected.
9. Admission procedure will be done as per the direction of the Directorate of the Collegiate Education.
10. The applicants belonging to the Scheduled Caste / Scheduled Tribe / Scheduled Caste – Arunthathiyar need to pay Registration Fee Rs. 2/- need not pay the Application Fees.

11. Age Limit: The upper age limit for the applicant is 21(twenty one) years as on 1st July 2021 . However, candidates belonging to SC, SC (A), ST, MBC/DNC, BC, BC(M), and Differently abled category are provided relaxation in age as per government norms.
12. Grievances in admission can be taken to the notice of the Regional Director of Collegiate Education, Madurai.

13. Ragging in any form is strictly prohibited. Students who involve in any such unlawful activities will be punished as per the rules of the Government.
14. List of documents and certificates to be submitted at the time of admission:
    - Application Form(downloaded) - 2
    - Passport sized photographs –3
    - Original Community Certificate (for Verification purpose) of applicants belonging to Scheduled Caste / Scheduled Tribe / Scheduled Caste –Arunthathiyar / Most Backward Classes / Denotified Communities / Backward Classes / Backward Community-Muslims.
    - Original Transfer Certificate and Conduct Certificate from the last studied institution. (The original Transfer Certificate submitted by the candidate will never be returned. So, the candidates are advised to take enough copies of the same for future use).
    - Original Certificates / documents (for Verification purpose) by
        - Differently abled candidates
        - Children of Tamil Nadu Ex-servicemen
        - NCC certificate holders
        - Participants in Sports
    - Three Photocopies of the above said documents

15. Information related to admission can be viewed by the candidates in the college website: www.apcac.edu.in.
16. Applications can be submitted online through the college website. Rupees Fifty (Rs.50) towards the application fee can be paid through online mode only. (SC and ST candidates are exempted from paying the application fee)

***DETAILS OF FEES TO BE PAID AT THE TIME OF ADMISSION (for one year)***

**(FEE ONCE PAID WILL NOT BE REFUNDED TO STUDENT IN ANY CIRCUMSTANCES)**

| | B.A., (Tamil)<br>B.Com.,(English Medium)<br>B,Com,(Tamil Medium)<br>B,Com,(Blockchain & Fintech)<br>B.B.A., | B.C.A.,<br>B.Sc.,(CS) | B.Com.,<br>(CA) |
|---|---|---|---|
| | ( Rs.) | (Rs.) | (Rs.) |
| Admission fee | 10 | 100 | 10 |
| Tuition fee | 9150 | 9510 | 11650 |
| Special fee | 465 | 515 | 465 |
| Lab fee | .... | 3000 | 2500 |
| Caution Deposit | .... | 500 | .... |
| University Entrance fees & Approval Fees | 600 | 600 | 600 |
| Convocation function and other fee | 25 | 25 | 25 |
| H.Sc Marks Verification fee | 50 | 50 | 50 |
| Total | **10300** | **14300** | **15300** |

(The above mentioned fee structure is liable to changes)

**Student ID Card - Extra**